செ.கு.எண் : 241

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 6.12.2011

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், சிறுநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.அப்துல் ரகீம் என்பவரின் மகன் சிறுவன் ரகமுத்துல்லா, திரு. அருள் என்பவரின் மகள் சிறுமி விஜி மற்றும் திரு. அசோகன் என்பவரின் மகள் சிறுமி தீபா ஆகிய மூவரும் 4.12.2011 அன்று ஊரணியில் குளிக்கும் போது நீரில் மூழ்கி உயிரிழந்தார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான சிறுவன் ரகமுத்துல்லா மற்றும் சிறுமிகள் விஜி, தீபா ஆகிய மூன்று பேரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செ, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்